Literacy for a Billion

Movie: Thalattu
Year: 1993

Song: Ennodu Pottiyittu
Lyricist: Pulamaipithan

என்னோடு போட்டியிட்டு
ஜெயிச்சவர் யாருமில்ல
எனக்கு எதிர்பாட்டு பாட
இங்கு நெனைச்சவர்
யாருமில்ல
பெயரிலே நான் பூரணம்
இசையிலே சம்பூரணம்
சுரங்களின் ஆலாபனம்
எனக்கது சாதாரணம்
இதோ நீ என்னோட
சவாலை சமாளி
குரலே மயங்கணும்
எதிரிகள் அடங்கணும்
என்னோடு போட்டியிட்டு
ஜெயிச்சவர் யாருமில்ல

உன்னோடு போட்டியிட்டு
ஜெயிக்கவும் நானிருக்கேன்
இப்ப உன் பாட்டை பின் பாட்டால்
மடக்கவும் நானிருக்கேன்
பெயரிலே நீ பூரணம்
இசையிலே நான் பூரணம்
கிழத்துக்கு சங்கீதமா
இது என்ன சாரீரமா
நிதானி நிதானி
துள்ளாதே சதா நீ
குரலே உடம்புலே
சுருதியிலே நழுவுது
உன்னோடு போட்டியிட்டு
ஜெயிக்கவும் நானிருக்கேன்

எட்டுக்கட்டை கிட்டாப்பாவும்
எட்டி நிக்க வேணும் இங்கே
ததரின தான ததரின னான ஆ...
எட்டுக்கட்டை கிட்டாப்பாவும்
எட்டி நிக்க வேணும் இங்கே
மாட்டிக்கிட்ட சின்ன பாப்பா
தப்பி நீயும் போவதெங்கே
தந்தி பேசும் தம்புரா
அந்து போச்சு தேவுடா
உச்ச ஸ்தாயியில் பாடவா
மூச்சு நின்னு போகவா
நடுக்கமா இருக்குதா
குளிர்ஜுரம் அடிக்குதா
சவாலை சமாளி விடாதே சவாரி
சிவ சிவ ஹரஹர
குறையுது கர கர
உன்னோடு போட்டியிட்டு
ஜெயிக்கவும் நானிருக்கேன்
இப்ப உன் பாட்டை பின் பாட்டால்
மடக்கவும் நானிருக்கேன்
பெயரிலே நீ பூரணம்
இசையிலே நான் பூரணம்
கிழத்துக்கு சங்கீதமா
இது என்ன சாரீரமா
நிதானி நிதானி
துள்ளாதே சதா நீ
குரலே உடம்புலே
சுருதியிலே நழுவுது
உன்னோடு போட்டியிட்டு
ஜெயிக்கவும் நானிருக்கேன்

பாட்டு பாடும் பாட்டா பாட்டால்
ராகம் சொல் தா தா தா தா
ஆ..... ஆ.....
பாட்டு பாடும் பாட்டா பாட்டால்
ராகம் சொல் தா தா தா தா
ராகத்துக்கு பேரா பேரா
சா ரி சா ரி கா கா கா கா
காபி ராகம் எப்படி

கொண்டு வாங்க இப்படி
ஆதி தாளம் எப்படி
தோத்து போகும் அப்படி
தலை எல்லாம் நரைச்சுது
கலைகளால் வெளுத்தது
நரம்பு தளர்ச்சி எதுக்கு முயற்சி
தகஜூன தகஜொடு
எதிர்பதை இனி விடு
உன்னோடு போட்டியிட்டு
ஜெயிச்சவர் யாருமில்ல
உனக்கு எதிர்பாட்டு பாட
இங்கு நெனைச்சவர்
யாருமில்ல

பெயரிலே நீ பூரணம்
இசையிலே சம்பூரணம்
சுரங்களின் ஆலாபனம்
உனக்கது சாதாரணம்
சவால் எதுக்கு
உன்னோடு எனக்கு
அனுபவம் பெரியது
அது ரொம்ப இனியது
உன்னோடு போட்டியிட்டு
ஜெயிச்சவர் யாருமில்ல
உனக்கு எதிர்பாட்டு பாட
இங்கு நெனைச்சவர்
யாருமில்ல

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.